1972 ஆகஸ்டு 18]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : குடிசை வாரியப் பகுதிகளுக்கு ஏதாவது அப்படி உதவித் தொகை வருகிறதா என்பது கேள்வி. அப்படி உதவி எதுவும் வரவில்லை.

ஆங்கில ஏடு வெளியீடு

* 149 வினு—**திரு. பி. எஸ். மணியன் :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

மாநில சுயாட்சி கோரிக்கைகள் குறித்து பிற மாநிலத்தவரும் வெளி நாட்டவரும் புரிந்து கொள்கிற வகையில் தமிழ்நாடு அரசு ஆங்கில ஏடு நடத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இல்லை.

திரு. பி. எஸ். மணியன் : மாநில சுயாட்சியின் நோக்கம் குறித்தும், நமக்குத் தேவையான அதிகாரங்களைக் குறித்தும் பொது மக்கள் மத்தியில் பிரசாரம் செய்வதற்காகச் செய்தித் துறையின் மூலமாகச் செய்திப் படங்கள் தயாரித்து அவற்றை மக்கள் தொடர்பு அதிகாரிகள் மூலமாகக் கிராமங்களில் பிரசாரம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அவ்வாறு இந்த அரசாங்கத்தின் சார்பிலே செய்வதாக உத்தேசம் இல்லை. ஆனாலும், இப்பொழுது ஆங்கிலப் பத்திரிகையில் எழுதுகின்ற கட்டுரைகள் மூலமாகவும், வேறு மாநாடுகளிலும் மற்ற பிரசாரக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்படுகிற தகவல்கள் மூலமாகவும், நிருபர்களிடத்தில் விளக்குவதன் மூலமாகவும், பல்வேறு நல்ல அரசியல் மேதைகளைச் சந்திக்கும்போது அவர்களிடத்தில் விஷயங்களை விளக்குவதன் மூலமாகவும் மாநில சுயாட்சி பற்றிய கருத்துக்கள் எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றன. சட்டப் பேரவையில்கூட மாநில சுயாட்சியின் முக்கியத்துவம் பற்றிப் பல முறை எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : மாநில சுயாட்சி சம்பந்தமாக இராஜ மன்னார் குழுவின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு பல நாட்கள் ஆகின்றன. முதல் அமைச்சர் அவர்கள் அந்த அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்து விவாதிப்பதற்கு வாய்ப்பு அளிப்போம்

என்று உறுதிமொழி கொடுத்தும் இதுவரையில் அந்த அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவில்லை. அதற்குக் காரணம் என்ன என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: காரணம், நேரமில்லாமையே தவிர வேறொன்றுமில்லை. எப்படியும் இந்த மன்றத்தில் விவாதிக்கப்படும், விரைவில்.

கிராமப்புறச் சாலைகள்

* 150 **வினு—திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

தமிழகத்தின் கிராமப் புறங்களில் கப்பிச் சாலைகள் அமைத்திட பணம் ஒதுக்க வேண்டி மத்திய அரசினை தமிழ்நாடு அரசு வலியுறுத்தியுள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை. எனினும், மத்திய அரசின் மானிய உதவியுடன் 1,500 அல்லது அதற்கு மேற்பட்ட மக்கள் தொகைகளைக் கொண்ட ஊர்களை இணைக்கும் சாலைகளை மேம்படுத்தும் ஒரு திட்டத்திற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது.

திரு. என். கிட்டப்பா : துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் முக்கிய நகர்ப் பகுதிகளில் ஆங்காங்கு கப்பிச் சாலைகள் போடப்பட்டுச் சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றன. ஐந்தாண்டு காலத்திற்கு நகர்ப் புறங்களுக்கு ஒதுக்கப்படுகிற பணத்தை கிராமப் புறங்களுக்கு ஒதுக்கி, கிராமப்புறங்களில் இணைப்புச் சாலைகளைக் கப்பிச் சாலைகளாக உருவாக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இருபுறச் சாலைகளும் ஒருசேரக் கவனிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஒன்றைப் புறக்கணித்துவிட்டு, மற்றொன்றைக் கவனிப்பது என்பது சரியல்ல. கிராமப்புறச் சாலைகளின் மேம்பாட்டுக்காகவும், புதிய இணைப்புச் சாலைகளை ஏற்படுத்துவதற்கும் 1970-71, 1971-72, 1972-73 ஆகிய ஆண்டுகளில் 1 கோடி 10 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் ஒதுக்கப்பட்டு வந்தது. இப்பொழுது 1,500 மக்கள் தொகைக்கு மேற்பட்ட ஊர்களுக்கு இணைப்புச் சாலைகள் அமைக்க மத்திய அரசு ஒரு